**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 130 /2019**

**Deposition of P.W.** 8

Name : Dr. Tr. தங்கவேல்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 04.06.2025

Accused Present

**முதல் விசாரணை**–

நான் தற்போது ஆரல்வாய்மொழி இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 14.01.2018 அன்று மருத்துவராக பணிபுரிந்த போது இரவு 10.15 மணியளவில் பெருஞ்சிலம்பு விலாபுறத்தை சேர்ந்த திரு. சந்திரசேகர் (48) தன்னை தெரிந்த நபர் தனக்கு வீட்டின் அருகில் வைத்து அரிவாளால் தாக்கியதாக கூறி சிகிச்சை பெற வந்தார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டது.

1) இடது முழங்கைக்கு கீழ் 3x 1 x 1 cm அளவிலான சிதைவு காயம்

2) இடது முழங்கைக்கு கீழ் 7x 0.2 cm அளவிலான மெல்லிய நீளமான சிதைவு காயம்.

3) வலது முழங்கைக்கு கீழ் 1 x 1 cm அளவிலான சிராய்ப்பு காயம்

காயம்பட்ட நபர் சுயநினைவுடன் இருந்தார். அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 17.01.2018ம் தேதி மருத்துவ சிகிச்சையிலிரந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1,2,3 ஆகியவை சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.4. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் எத்தனை மணிக்கு ஏற்பட்டது என்று காயச்சான்றில் குறிப்பிடவில்லை. காயம்பட்ட நபருக்கு வெட்டுக்காயம் இல்லை. வெட்டுக்கத்தியால் வெட்டும் போது அதை தடுத்தால் வெட்டுக்காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. அ.சா.ஆ.4ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 காயங்களும் ஒரே வெட்டினால் ஏற்பட வாய்ப்பு இல்லை. காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் வெட்டுக்கத்தியால் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் கூர்மையான பகுதியால் ஏற்பட வாய்ப்பு இல்லை. என்னிடம் காயம்பட்டவர் வெட்டுக்கத்தியின் கூர்மையில்லாத பகுதியால் காயம் ஏற்பட்டதாக கூறவில்லை. காயம்பட்டவரை 14.01.2018ம் தேதி இரவு 10.15 மணிக்கு மருத்துவமனையில் அனுமதித்தேன் என்றால் சரிதான். காயம்பட்ட நபரை அவரது நண்பர் ரெஜி என்பவர் அழைத்து வந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் காயச்சான்று சுரேஷ் என்பவருக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த காயச்சான்று எ.சா.ஆ.1 14.01.2018ம் தேதி இரவு 09.45 மணிக்கு சுரேஷ் என்பவரை சிகிச்சைக்காக அனுமதித்து உள்ளேன். எ.சா.ஆ.1ன் படி சுரேஷ்–க்கு இடது முழங்கையில் 2x 2 cm அளவிலான சிராய்ப்பு காயம், வலது கண் பகுதியில் 1 x 1 cm அளவில் சிராய்ப்பு காயம், இடது முழங்கை பகுதியில்

2x 2 cm அளவில் வீக்க காயம், வலது கழுத்து பகுதியில் 3 x 3 cm அளவில் வீக்க காயம், வலது தலை பகுதியில் 1 x 1 cm அளவில் வீக்க காயம் ஆகியவை இருந்தன. மேற்படி காயங்கள் கம்பு மற்றும் கையால் ஏற்பட்டதாக கூறினார்.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 130 /2019**

**Deposition of P.W.** 9

Name : திரு. ஜாண் கிறிஸ்துராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 04.06.2025

Accused Present

**முதல் விசாரணை**–

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். தற்போது ஆசாரிப்பள்ளத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் 15.01.2018ம் தேதி காலை 06.30 மணிக்கு கொற்றிக்கோடு காவல்நிடிலையத்தில் பொறுப்பு உதவி ஆய்வாளராக இருந்த போது தக்கலை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற இன்டிமேஷனை பெற்று 07.00 மணிக்கு தக்கலை அரசு மருத்துவமனைக்கு வந்து உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த சந்திரசேகரன் அவர்களிடம் ஒருபுகார் வாக்குமூலம் பெற்று 08.00 மணிக்கு கொற்றிக்கோடு காவல்நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மை படி நிலைய குற்ற எண். 12/2018 பிரிவுகள் 341, 294(பி), 307, இ.த.ச மற்றும் பிரிவு 3 (1) தமிழ்நாடு பொதுச்சொத்துக்களை சேதப்படுத்துவதை தடைசெய்தல்

சட்டப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.இவ்வழக்கில் எதிரியான சுரேஷ் என்பவரை நிலையம் அழைத்து வந்திருந்தோம். அவருக்கும் காயங்கள் இருந்ததால் கொற்றிக்கோடு காவல்நிலைய நமூனா 2/2018 என கொடுத்து தக்கலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உடன் அன்றைய தினம் காலை 08.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டேன். 18.01.2018ம் தேதி காலை 10.20 மணிக்கு தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு கிடைத்துள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கு என்ன காரணம் என்று குறிப்பிட்டு கூறமுடியாது. முதல் தகவல் அறிக்கையில் எதிரியை ஊர் மக்கள் விரட்டியதில் கீழே விழுந்ததாக குறிப்பு இல்லை. எதிரி மீது குண்டர் சட்டப்படி வழக்கு பதிவு செய்வதற்காக அழைத்து வந்து காவல்நிலையத்தில் வைத்து கடுமையாக தாக்கி இறந்து விடுவார் என்று பயந்து மருத்துவமனைக்கு அனுப்பி விட்டு எதிரி எங்கள் மீது வழக்கு போடுவேன் என்று சொன்னதால் அதற்காக இந்த வழக்கின் வாதியை அழைத்து பொய்யான வாக்குமூலம் பெற்று எங்கள் காவல்நிலைய நிரந்தர சாட்சியான ரவிசேகர் என்பவரை வைத்து போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.